Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 484/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 7 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 7 | தொழில் | - | ஓட்டுநர் |
| பெயர். | - | வினுபிரசாத் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | ஜி.பாவாடை | சமயம் | - | |
| கிராமம் | - | சரவணப்பாக்கம் | வயது | - | 34 |

14.11.2025

1, 3 முதல் 5 எதிரிகள் ஆஜரில்லை. 1, 3 முதல் 5 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது சரவணப்பாக்கம் கிராமத்தில் வசித்து லாரி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். புகார்தாரரை தெரியும். எதிரிகளை தெரியும். புகார்தாரருக்கு, எதிரி முனுசியா என்பவருக்கு அவ்வப்போது சண்டை ஏற்பட்டு முனுசியா அவர் அம்மா வீட்டிற்கு போய்விடுவார். ஷாஜகான் போய் பேசி கூப்பிட்டு வருவார். இதே மாதிரி நடந்து கொண்டிருந்தது.

2. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு மதியம் 12.00 முதல் 12.30 மணியளவில் புகார்தாரர் வீட்டில் சத்தம்கேட்டு நான் வெளியே வந்து பார்த்த போது முனுசியாவும் அவர் அண்ணன், தம்பிகளும் சேர்ந்து ஷாஜகானை வெளியே இழுத்து போட்டு அடித்துக்கொண்டிருந்தார்கள். நானும், அங்கிருந்தவர்களும் சேர்ந்து சண்டையை விலக்கிவிட்டோம். சண்டை போட்டுவிட்டு அவர்கள் அடித்துவிட்டு வீட்டிற்கு போய்விட்டார்கள். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவத்தின் போது நான் என்ன வேலை செய்தேன் என்றால் வீட்டிலிருந்தேன், அப்போது சின்னதாக டாடா ஏ.சி. ஓட்டிக்கொண்டிருந்தேன். 13 வருடங்களுக்கு முன்பு கிளினராக இருந்தேன். ஷாஜகான் வீட்டு பக்கத்தில் எனக்கு வீடு இல்லை என்றால் ஷாஜகான் வீட்டிக்கு பக்கத்தில் எதிரில் வாடகை வீட்டில் இருந்தேன்.ரஷித்கான் வீட்டிற்குஎதிரில் இருந்தேனா என்றால் ஆமாம். எதிரில் இருந்த வீடு என் வீடா என்றால் ஆமாம். அங்கு எனக்கு வீடே கிடையாது என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் நான் அங்கு தான் இருந்தேன், நீங்கள் வந்து விசாரித்து பாருங்கள் என்று சாட்சி சொல்கிறார்.

2. சம்பவம் நடந்து எத்தனை நாள் கழித்து விசாரித்தார்கள் என்றால் அப்போது நான் சின்னப்பையனாக இருந்தேன், என் அப்பாவிடம் தான் விசாரித்தார்கள், என்னிடம் விசாரிக்கவில்லை. நான்சொல்வது போல் சம்பவமே நடைபெறவில்லை என்றாலும், ஷாஜகானும், நானும் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை, அவர்கள் அடித்ததை நான் பார்த்தேன்.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 484/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 8 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 8 | தொழில் | - | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| பெயர். | - | மணி | வட்டம் | - | விழுப்புரம் |
| த/பெ. | | சின்னையா | சமயம் | - | |
| கிராமம் | - | விழுப்புரம் | வயது | - | 60 |

14.11.2025

1, 3 முதல் 5 எதிரிகள் ஆஜரில்லை. 1, 3 முதல் 5 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் கடந்த 30.09.2025 ல் திண்டிவனம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி பணிஓய்வு பெற்று விட்டேன். நான் கடந்த 11.03.2013 ந் தேதி திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது காலை 08.00 மணியளவில் சரவணப்பாக்கம் கிராமத்தை சேர்ந்த ரஷித்கான் மகன் ஷாஜகான் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப்பெற்று நிலைய குற்ற எண்.151/2013 ச/பி. 147, 294(பி), 448, 323, 506(1) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **ஷாஜகான் கொடுத்த புகார் அ.சா.ஆ.3 ஆகும். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அசாஆ. 4 ஆகும்.**

2. மேற்படி வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே காலை 11.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் நாகராஜன் மற்றும் ஆனந்தபாபு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். **நான் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் வரைபடம் அசாஆ 5 , 6 ஆகும்**.

3. பின்பு சாட்சிகள் ஷாஜகான், ரஷித்கான், மகபூப் பீவி, பாவாடை, வெங்கடேசன், வினுபிரசாத், நாகராஜன் மற்றும் ஆனந்தபாபு ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரிகளை தேடிச்சென்றதில் எதிரிகள் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணையில் சென்றதால் அவர்களை கைது செய்ய இயலவில்லை.

4. பின்னர் காயம்பட்ட ஷாஜகான் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அனிதாராஜ் என்பவரை 27.07.2013 ந் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றேன். அதில் மருத்துவர் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என கருத்து தெரிவித்துள்ளார். **அந்த விபத்து பதிவேடு அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும்**. இத்துடன் எனது வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது ச/பி. 147, 294(பி), 448, 323, 506(1) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

1. சம்பவம் நடந்து 80 நாள் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகாரில் காலதாமதத்திற்கான காரணத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. எனதுவிசாரணையில் மேற்சொன்ன காலதாமதத்திற்கான காரணத்தை விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் குடும்ப பிரச்சனை காரணமாக காலதாமதமக வந்து புகார் கொடுத்துள்ளார்கள் என்று தெரிய வந்தது. குடும்ப பிரச்சனை காரணமாக காலதாமதம் ஏற்பட்ட காரணத்தை எந்த சாட்சி விசாரித்து தெரிந்துகொண்டேன் என்றால் காலதாமதத்திற்கு யாரும் சொல்லவில்லை.

2. புகாரில் சம்பவத்தை யார் பார்த்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் விலக்கிவிட்டதாக சொல்லியுள்ளார்கள், விலக்கிவிட்டாலே பார்த்ததாக தான் அர்த்தம். நான் விசாரித்த சாட்சிகளில் சம்பவ இடத்திற்கு அருகில் யாருக்கும் வீடுகள் இல்லை என்றால் பாவாடை, வெங்கடேசன் வீடுகள் உள்ளது. அவர்கள் வீடு எதிரில் உள்ளது.

3. புகார்தாரரின் தந்தை ரஷித்கான் என்பவர் உதவி ஆய்வாளராக இருந்தாரா என்றால் ஆமாம். எதிரிகள் கொடுத்த புகாரின் மீது புகார்தாரர் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் என்னுடைய ரகசிய புலனாய்வில் தெரிய வந்தது.

4. சாட்சிகள் வெங்கடேசன், நாகராஜன், குணசேகரன், ஆனந்தபாபு ஆகியோர்களை நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் முன்பிணையில் வந்த பிறகு அவர்களை விசாரித்து வாக்குமூலம் வாங்கினேனா என்றால் அவர்கள் விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை. நான் சொல்வது போல் ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றாலும், புகார்தாரரின் தந்தை உதவி ஆய்வாளர் என்பதால் எதிரிகள் தரப்பில்

உளுந்தூர்பேட்டை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்ததை மனதில் வைத்துக்கொண்டு பொய் புகார் கொடுத்து அதன் பேரில் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. மருத்துவமனையிலிருந்து தகவல் வந்த பிறகு எங்கள் காவல் நிலையத்திலிருந்து அவரை விசாரித்து வாக்குமூலம் வாங்கினோமா என்றால் இன்டிமேசன் பெற்று மருத்துவமனைக்கு போகும் போது அவர் அங்கு இல்லை.

**மறுவிசாரணை** -இல்லை.

(Sd/-R.SenthilKumar)
D.M-cum-JM,
T.V.Nallur.